


தோன்றிய நாளாக இருந்துவந்ததுதான். அவ்வப்போது வெடிக்கும். அவ்வப்போது அடங்கிப் போகும். சிறு மோதல்கள், சில்லறை உரசல்கள் இல்லாமல் இருந்ததில்லை. ஆனால், யாசிர் அரா∴பத் உயிருடன் இருந்த வரை, ஹமாஸ் அல் ∴பத்தா மோதல் பெரிய பரிமாணம் பெற்றதில்லை.

இரண்டு இயக்கங்களுக்கும் அடிப்படை நோக்கம் பாலஸ்தீன் விடுதலை என்பதுதான். எனினும், அடையும் வழியில் கணிசமான கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்கள். அரா∴பத், ஜனநாயகத்தை ஒப்புக்கொண்டு, இஸ்ரேலுடன் சமரசத்துக்குச் சம்மதித்து, எத்தனையோ படிகள் இறங்கிவந்து, பாலஸ்தீன் அத்தாரிடி என்னும் ஆட்சி அமைப்பை உருவாக்கப் பாடுபட்டார். அப்போது அதனைக் கடுமையாக எதிர்த்துக்கொண்டிருந்த ஹமாஸ், இன்று அதே பாலஸ்தீன் அத்தாரிடியின் அதிகார அமைப்பாக, அதே ஜனநாயகத்தை ஏற்று, தேர்தலில் போட்டியிட்டு, வெற்றியும் பெற்று ஆளத் தொடங்கிவிட்ட பிறகு, மேற்படி கருத்து வேறுபாடுகளுக்கும் உரசல், மோதல்களுக்கும் நியாயமாக இடமின்றிப் போயிருக்கவேண்டும்.

ஆனால், இது அதிகரித்திருக்கிறது என்பதுதான் பிராந்தியத்தின் இன்றைய பெருங்கவலை. குறிப்பாக, அங்கே அரா∴பத்தும் இங்கே ஷேக் அகமது யாசினும் இறந்துவிட்ட பிறகு, அடுத்த கட்டத் தலைவர்களால் அபிப்பிராய விரோதங்களைச் சகிக்க முடியாமல் போய்விட்டது.

இரு தரப்பினருமே ஆயுதம் தூக்கியவர்கள். இரு தரப்பினருமே இஸ்ரேலுக்கு எதிரான தீவிர யுத்தம் செய்தவர்கள், செய்கிறவர்கள். கொள்கை வேறாயினும் நோக்கம் ஒன்றுதான் என்கிற அளவில் பாலஸ்தீனியர்கள் இரு தரப்பையுமே சம அளவில்தான் ஆதரித்து வந்தார்கள். ஆனால், இப்போது நடப்பது என்ன?

ஹமாஸ், இஸ்ரேலிய இலக்குகளைத் தாக்குவதை நிறுத்திவிட்டு, ∴பத்தா இயக்கத்தினரைத் தீவிரமாகத் தாக்கத் தொடங்கியிருக்கிறது. ∴பத்தாவும் சளைக்காமல், தனது கவனத்தை ஹமாஸ் முக்கியஸ்தர்கள் மீது குவித்து, தாக்குதலுக்குச் சந்தர்ப்பம் தேடிக்கொண்டிருக்கிறது. கிடைக்கிற எந்தவொரு தருணத்தையும் வீணாக்காமல் போட்டுப் பார்க்கிறது.

ஜூலை 2005-ல் இரு தரப்பு மோதல் முற்றிப்போய், பாலஸ்தீனிய இயக்கங்களின் ஒற்றுமையே முற்றிலும் சீர்குலைந்துவிடும் அபாயம் ஏற்பட்டது. அப்போது ஏதோ பேசி, சமரசம் செய்து கொஞ்சம் ஒட்டுப் போட்டுப் பார்த்தார்கள். இனி அடித்துக்கொள்வதில்லை என்று இரண்டு பேருமே ஒப்புக்கொண்டு ஓரமாகப் போனார்கள். ஆனாலும் உள்ளுக்குள் உயிருடன் இருந்த வன்மம் ஓய்ந்தபாடில்லை. இஸ்ரேலிய இலக்குகளைக் குறிவைத்து ஹமாஸ் ஏவும் ஏவுகணைகளை ∴பத்தா போராளிகள் தடுத்து வீழ்த்திக்கொண்டிருந்தார்கள்.

இது மிகவும் விபரீதமான விளையாட்டல்லவா? இந்தச் செயலின் அர்த்தம் என்ன? ஃபத்தாவும் இஸ்ரேலும் ஓரணியில் நின்று ஹமாஸுக்கு எதிராகப் போரிடுவதாக அல்லவா புரிந்துகொள்ள வேண்டியிருக்கும்? என்ன அபத்தம் இது?

எடுத்துச் சொன்ன பிறகுதான், அந்தச் செயலை நிறுத்திவிட்டு முறைத்துக்கொண்டு ஒதுங்கிப் போனது ஃபத்தா. எடுத்துச் சொன்னவர்கள் இரானியர்கள். லெபனானியர்கள். ஜோர்டன் ஆதரவாளர்கள்.

ஆனால் இந்த ஒதுங்கல், பதுங்கலெல்லாம் தேர்தல் வரைதான். கடந்த தேர்தலில் ஹமாஸ் வென்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, ஃபத்தா போராளிகள் மீண்டும் ஹமாஸுக்கு எதிராக தீவிரமாகக் களமிறங்கிவிட்டார்கள்.

அவர்களுக்குச் சில காரணங்கள் இருந்தன. உதாரணமாக, ஆட்சிக்கு வந்ததுமே இஸ்மாயில் ஹனியா, முந்தைய ஃபத்தா ஆட்சியில் ஊழல்கள் அதிகம் என்று சொன்னார். அரசியல் என்றால் ஊழல் இல்லாமலா? திருக்குறளுக்கு அடுத்தபடி உலகப் பொதுமறையான விஷயம். ஆனாலும் ஒரு விடுதலை இயக்கம் ஊழல் செய்யுமா? அராஃபத் வளர்த்த இயக்கம்?

மக்களால் இதை ஜீரணிக்க முடியாதது ஒரு பக்கம் இருக்க, ஃபத்தா போராளிகள் துடித்துத் துவண்டு போனார்கள். தங்கள் தலைவரை, தங்கள் ஆட்சியைக் குறை சொல்ல இவர்கள் யார் என்கிற கோபம். ஒருவேளை, தங்கள் ஆட்சியில் உண்மையிலேயே ஊழல் இருந்திருக்குமோ என்கிற ஐயம் விளைவித்த கோபம் என்றும் அதனைச் சொல்லலாம்.

ஆட்சியே அவர்களுக்குப் புதிது. எனவே, ஊழல் மிகவும் புதிது. சாத்தியமா? நடந்திருக்கக் கூடியதுதானா? இது ஒரு பக்கம். ஹமாஸ் முன்வைத்த இந்தக் குற்றச்சாட்டு, உலக அளவில் ஃபத்தாவின் புகழுக்கு ஏற்படுத்தக்கூடிய களங்கம் குறித்த கோபம் இன்னொரு பக்கம். ஊழல் விஷயம் மக்களுக்குத் தெரிந்ததால்தான் அவர்கள் அந்தத் தேர்தலில் ஃபத்தாவை ஒதுக்கிவிட்டு ஹமாஸுக்கு வாக்களித்தார்கள் என்றும் பேசினார்கள். இதுவும் அவர்களுடைய கோபத்தைக் கிளறிவிட்டது.

உண்மையில், ஃபத்தா ஆட்சியில் செய்ததாகச் சொல்லப்படுகிற ஊழல்கள் குறித்த வெளிப்படையான ஆதாரங்கள் ஏதும், இன்றுவரை யாருக்கும் கிடைக்கவில்லை. எல்லாம் குற்றச்சாட்டு அளவிலான ஊழல்கள் மட்டுமே. அதைவிட முக்கியம், ஊழல் செய்யும் அளவுக்கு அது ஒன்றும் பணம் புரளும் பிராந்தியமும் அல்ல. சிறிய அளவில் சில கையூட்டுகள், ஆயிரங்களிலான ஊழல்கள் இருந்திருக்கக் கூடும். ஆனால் ஊதிப் பெரிதாக்கி, மைக் வைத்து முழங்குமளவுக்கு சாத்தியமில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால், ஹமாஸ் மிகப்பெரிய ஊழல்கள் நடந்திருப்பதாகச் சொன்னதுதான் பிரச்னையாகிப் போனது. இரு தரப்பு மோதல்கள் தவிர்க்க முடியாதது என்கிற நிலை உண்டாகக் காரணமானது.

தேர்தலுக்குப் பிறகு, ஃபத்தாவின் தற்கொலைப் படையினர் தயார் செய்யப்பட்டு காஸாவுக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். முதலில் ஊர்வலம். பிறகு கோஷங்கள். ஆட்சி மன்றக் கட்டடத்துக்கு எதிரே ஆர்ப்பாட்டங்கள். முடிந்தால் கலவரம். சில தலைகள் விழுமானால் உத்தமம். புதிய அரசுக்கு என்னென்ன விதங்களில் தர்மசங்கடங்கள் தரலாம் என்று அதன் பிறகு உட்கார்ந்து ஆலோசிக்கலாம் என்று ஃபத்தா முடிவு செய்திருந்தது.

கொஞ்சம் சிக்கல்தான். ஹமாஸ் அதனைப் பெரிய அளவில் எதிர்பார்த்திருக்கவில்லை. என்னதான் பகை இருந்தாலும், இத்தனை மோசமான அரசியல்வாதிகளாக நடந்துகொள்வார்கள் என்று ஹமாஸின் மூத்த தலைவர்கள் நினைக்கவில்லை. ஆகவே, சற்று அலட்சியமாக இருந்துவிட்டார்கள்.

அதுநாள் வரை இஸ்ரேலுக்கு எதிராக மட்டுமே கோஷமிட்டு, கொடி தூக்கி, ஆயுதமேந்திப் போராடிய ஃபத்தா போராளிகள், முதல்முதலாக அப்போது ஹமாஸுக்கு எதிராகப் போராடக் களமிறங்கினார்கள். சில கார்கள் எரிக்கப்பட்டன. கற்கள் பறந்தன. தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டுகள் அனைத்தும் சகோதர இனத்துக்குள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அரசியல் பெரும்பாலும் ஆபத்தானது. சமயத்தில் தீவிரவாதத்தைக் காட்டிலும். பாலஸ்தீன் மக்கள் துடித்துப் போனார்கள். இதற்காகவா இத்தனை ஆண்டுகளாகப் போராடினார்கள்? அதிகார வெறி ஒன்றுதானா இயக்கங்களின் இலக்கு? இப்படி மூன்றாம்தர அரசியல்வாதிகள் போல நடந்துகொள்வதற்காகத்தானா ஐம்பதாண்டுகளாக விடுதலை இயக்கம் என்கிற முகமூடி அணிந்திருந்தார்கள்?

அராஃபத் இல்லாத வெறுமை அப்போது அவர்களுக்கு உறைத்தது.

இருபத்தியோராம் நூற்றாண்டு, ஆயுதங்களுடையது அல்ல. அமைதியினுடையது. அமெரிக்க அரசு நீங்கலாக ஒட்டுமொத்த உலகமும் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள ஆரம்பித்து வெகுகாலம் ஆகிவிட்டது. ஆயுதப் போராட்டங்கள் வெல்லும் சாத்தியம் குறைந்துகொண்டே வருவதைப் பாலஸ்தீனியர்கள் முழு விழிப்புணர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆகவே. அராஃபத் தேர்ந்தெடுத்த பாதை சரியே என்று அவர்கள் நினைத்தார்கள். அராஃபத்தின் பாதை சரி. ஆனால். அவரது அடிப்பொடிகள் போகிற பாதை?

அதுதான் ஆபத்தாக இருந்தது. அதில்தான் அபாயம் அதிகமாகத் தெரிந்தது. ஜனநாயகம்தான் வழி என்று ஹமாஸுக்கும் புரிந்ததால்தான் தேர்தலில் நின்றது. ஆனால், போராளி இயக்கமாக இருந்த காலத்தில், எதிரிகளை மட்டுமே தாக்கிவிட்டு, ஜனநாயகக் கட்சியாக அறிமுகமான பிறகு, சொந்தச் சகோதரர்களுடனேயே தாக்குதல் நடத்தியாகவேண்டிய இருப்பியல் பிரச்னை எழும் என்று அவர்கள் நினைத்திருக்க முடியாது.

ஜனநாயகத்துக்கும் சில விலைகள் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை. இனி என்ன ஆகப்போகிறது?

கடந்த டிசம்பர் 16-ம் தேதி பாலஸ்தீன் அதிபர் மம்மூத் அப்பாஸ் (ஃபத்தா) அடுத்த பொதுத்தேர்தலைச் சற்று முன்னதாகவே நடத்தத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்தார். இது ஹமாஸுக்கு மிகுந்த எரிச்சலை அளித்திருக்கிறது. புதிதாக ஆளவந்தவர்கள் அவர்கள். தடுமாற்றங்கள் இல்லாமல் இல்லை. குழப்பங்களும் குளறுபடிகளும் கூட இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், ஒரு முழு ஆட்சிக் காலமாவது இருந்து பார்த்தாலல்லவா லட்சணம் முழுக்கப் புரியும்? மக்களுக்கு இல்லாவிட்டாலும் தனக்கே கூட?

ஆனால், அதிபரின் முடிவு அது. ஆளும் கட்சியாகவே இருந்தாலும் பெரிதாக ஒன்றும் செய்துவிட முடியாது. எதிர்க்கலாம். அவ்வளவுதான். மாற்ற முடியாது.

ஏதாவது செய்து நிலைமையைச் சற்று அமைதிப்படுத்த முடியுமா என்று யோசித்து, சமீபத்தில் ஃபத்தாவுடன் ஓர் அமைதி உடன்படிக்கைக்கு ஏற்பாடு செய்யப் பார்த்தார்கள். இனி அடித்துக்கொள்வதில்லை. ஆனால், ஒப்பந்தம் ஏற்கப்பட்ட தினத்தன்றே மூன்று ஹமாஸ் போராளிகளை ஃபத்தாவினர் கொன்றுவிட்டார்கள். ஆகவே, ஏற்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு, மேலும் தீவிரமாக மோதத் தொடங்கினார்கள். இன்னும் ஆறுபேர் படுகொலை. ஒன்பது பேர் படுகாயம்.

குறைந்தது ஒரு நாள் விட்டு ஒருநாளாவது காஸாவில் ஹமாஸுக்கும் ஃபத்தாவுக்குமான

மோதல்கள் நடக்கின்றன. ஜனவரி பிறந்ததிலிருந்து இந்தக் கணக்கு சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த மோதல் எப்போது யுத்தமாகும் என்றுதான் இஸ்ரேல் பார்த்துக்கொண்டிருக்கிறது. அடித்துக்கொண்டு இரண்டு தரப்பினரும் மொத்தமாக உயிரைவிடும் கணம்தான் அவர்களுக்கு வேண்டியது.

ஹமாஸும் ஃபத்தாவும் இல்லாமல் போய்விட்டால், பாலஸ்தீன் போராட்டம் என்பது வெறும் பேச்சளவு நடவடிக்கையாகிவிடும். இதர போராளி இயக்கங்கள் அனைத்தையும் ஒடுக்க, இஸ்ரேலுக்கு ஒரு வார காலம் போதும்.

இது இந்த இயக்கங்களுக்குத் தெரியாதா?

தெரியும். தெரிந்தும் ஏன் இப்படி அசிங்கமாக மோதிக் கொள்கிறார்கள்?

இந்தக் கேள்விதான் அத்தனை பேருக்கும். இன்றைக்கு மத்தியக் கிழக்கு நாடுகள் சந்தித்து வரும் அரசியல் நெருக்கடிகள் கொஞ்ச நஞ்சமல்ல. இராக்கின் வீழ்ச்சிக்குப் பிறகு எந்தக் கணத்திலும் இரான் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என்கிற அபாயம் மிக வெளிப்படையாகத் தெரிகிற சூழ்நிலையில், பிராந்தியம் முழுவதுமே பதற்றம் பற்றிக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு தேசமும் தம் சொந்த நாட்டுப் பாதுகாப்புக்கென பிரத்தியேக ஏற்பாடுகள் செய்துவருகின்றன. எப்போதுமே பாலஸ்தீன் விஷயத்தில் அரபு நாடுகள் ரகசிய அனுதாபம் தெரிவிப்பது மட்டுமே வழக்கம். இப்போது அதைக்கூடச் செய்ய முன்வருவார்களா என்பது சந்தேகம். நூற்றாண்டு காலமாகத் தொடரும் யுத்தம்தானே என்கிற அலுப்பு காரணமா; என்ன செய்தும் இஸ்ரேலை இல்லாமல் போகச் செய்யமுடியாது என்கிற நிதர்சன உண்மையின் சூடு காரணமா என்று சொல்வதற்கில்லை.

ஹமாஸும் ஃபத்தாவும் அடித்து மோதி அழிந்துபோனால்; அனுதாபம் தெரிவிக்கக் கூட ஆளிருக்கமாட்டார்கள் என்பதே உண்மை. இது ஹமாஸுக்குப் புரியவேண்டும். ஆளக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் பிழைக்க ஒரு வழி.

இல்லாது போனால், மீண்டும் பாலஸ்தீன் முழுவதும் இஸ்ரேலின் வசம் போவது தவிர்க்கமுடியாத விஷயமாகிவிடும்.